**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:- திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி 27-ம் நாள்**

**இடை நிலை மனு எண்.02/2024**

**இன்**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.06/2024**

1. சாந்தி

2. முனுசாமி (எ) பெரியண்ணன்

.... மனுதாரர்கள் / 1, 2 எதிர்மனுதாரர்கள்

**//எதிர்//**

உண்ணாமலை

...எதிர்மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்

இம்மனு என் முன்பாக 10.07.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. மோனிஷ்அரவிந்த், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மேற்படி வழக்கில் கடந்த 28.10.2024-ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்ய வேண்டுமென்று உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 41 விதி 21 பிரிவு 151-ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :-**

மேற்படி மனுவில் மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பிறகு கடந்த 28.10.2024-ம் தேதியில் நீதிமன்றத்திற்கு முன்னிலையாக மனுதாரர் ஊத்தங்கரை சென்றடைவதற்காக மனுதாரர் கிராமத்தில் இருந்த போது 2-ம் மனுதாரர் அவரது வழக்கு விவரங்களையும் மனுதாரரிடமே கொடுத்து வழக்கறிஞரை அமர்த்துவதற்கான ஏற்பாட்டினை செய்ய கேட்டு கொண்டிருந்ததால் அது பற்றிய ஆவணங்களை பெற்று கொண்டு மனுதாரர் அவரின் இருசக்கர வாகனத்தில் சாலையில் வந்து கொண்டிருந்த போது ஏற்பட்டிருந்த சிறிய விபத்தின் காரணமாக மனுதாரர் காலில் காயம் ஏற்பட்டது. அதனால் மனுதாரரால் உரிய நேரத்திற்கு நீதிமன்றத்திற்கு வந்து முன்னிலையாக இயலவில்லை. மேலும் அசல் வழக்கில் இருந்த வழக்கு கோப்புகளை அதன் பிறகு பெற மனுதாரரது வழக்கறிஞரையும் சந்திக்க இயலாமல் போனது. அதனால் கடந்த 28.10.2024-ம் தேதியில் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் மனுதாரருக்கும், 2-ம் மனுதாரருக்கும் எதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மனுதாரர் மேற்சொன்ன மேல்முறையீட்டில் உரிய வாதத்தினை முன்னிட தயாராக இருக்கும் நிலையில் ஏற்கனவே மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவின் காரணமாக மனுதாரர்களது தரப்பினை நீதிமன்றத்தில் தெரிவிக்க இயலாத நிலை உள்ளது. மேற்சொன்ன நிகழ்வு வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல. மனுதாரர்களையும் மீறி நடந்துவிட்ட தற்செயலான நிகழ்வாகும். மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்படாவிட்டால் மிகுந்த பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். அதனை ஈடு செய்ய இயலாது. மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 28.10.2024-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள

ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யப்பட வேண்டியது நியாயமாயும் அவசியமாயும் உள்ளது. இல்லையேல் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆகையால் மேற்படி வழக்கில் கடந்த 28.10.2024-ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து தகுந்த உத்தரவு செய்ய வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேல்முறையீட்டு தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு சார்வு செய்ய வேண்டி கடந்த 27.09.2024-ம் தேதியில் போடப்பட்ட பின்னர் மனுதாரர்கள் / 1, 2-ம் எதிர்மனுதாரர்கள் கடந்த 22.10.2024-ம் தேதியில் 1-ம் மனுதாரரும், 16.10.2024-ம் தேதியில் 2-ம் எதிர்மனுதாரரும் நீதிமன்ற சம்மனை பெற்றுக்கொண்டு கால அவகாசத்திற்குள் வழக்கறிஞர்களை சந்திக்காமல் எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்று ஒருதலைப்பட்ச உத்தரவினை பிறப்பிக்கப்பட்ட பின்னர் இத்தகைய மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் இடை மனு எண். 02/2024 உடன் எதிருரையும் சேர்த்து தாக்கல் செய்யாமல் எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்றும் நீதிமன்றத்தை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் - மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

**5.தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பிறகு கடந்த 28.10.2024-ம் தேதியில் நீதிமன்றத்திற்கு முன்னிலையாக மனுதாரர் ஊத்தங்கரை சென்றடைவதற்காக மனுதாரர் கிராமத்தில் இருந்த போது 2-ம் மனுதாரர் அவரது வழக்கு விவரங்களையும் மனுதாரரிடமே கொடுத்து வழக்கறிஞரை அமர்த்துவதற்கான ஏற்பாட்டினை செய்ய கேட்டு கொண்டிருந்ததால் அது பற்றிய ஆவணங்களை பெற்று கொண்டு மனுதாரர் அவரின் இருசக்கர வாகனத்தில் சாலையில் வந்து கொண்டிருந்த போது ஏற்பட்டிருந்த சிறிய விபத்தின் காரணமாக மனுதாரர் காலில் காயம் ஏற்பட்டது என்றும், அதனால் மனுதாரரால் உரிய நேரத்திற்கு நீதிமன்றத்திற்கு வந்து முன்னிலையாக இயலவில்லை என்றும், மேலும் அசல் வழக்கில் இருந்த வழக்கு கோப்புகளை அதன் பிறகு பெற மனுதாரரது வழக்கறிஞரையும் சந்திக்க இயலாமல் போனது என்றும், அதனால் கடந்த 28.10.2024-ம் தேதியில் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் மனுதாரருக்கும், 2-ம் மனுதாரருக்கும் எதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேல்முறையீட்டு தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு சார்வு செய்ய வேண்டி கடந்த 27.09.2024-ம் தேதியில் போடப்பட்ட பின்னர் மனுதாரர்கள் / 1, 2-ம் எதிர்மனுதாரர்கள் கடந்த 22.10.2024-ம் தேதியில் 1-ம் மனுதாரரும், 16.10.2024-ம் தேதியில் 2-ம் எதிர்மனுதாரரும் நீதிமன்ற சம்மனை பெற்றுக்கொண்டு கால அவகாசத்திற்குள் வழக்கறிஞர்களை சந்திக்காமல்

எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்று ஒருதலைப்பட்ச உத்தரவினை பிறப்பிக்கப்பட்ட பின்னர் இத்தகைய மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் இடை மனு எண். 02/2024 உடன் எதிருரையும் சேர்த்து தாக்கல் செய்யாமல் எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்றும் நீதிமன்றத்தை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் எடுத்துரைத்தார்.

இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்து மனுதாரர் தரப்பில் 28.10.2024-ம் தேதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாக ஆவணங்களை பெற்றுக் கொண்டு வந்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட சிறிய விபத்தின் காரணமாக நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் முன்னிலையாக முடியவில்லை என்றும், இம்மனு அனுமதிக்கப்படவில்லை எனில் மிகுந்த பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும், அதனை ஈடு செய்ய இயலாது என்றும் எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், இருதரப்பிலும் எடுத்துரைக்கும் வாதுரைகளையும், சாட்சிகளையும் பரிசீலித்து தீர்ப்பு பிறப்பித்தால் தான் அது தகுதி வாழ்ந்ததாகவும் அறுதியானதாகவும் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் எனில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1000/-யை 20.08.2025-க்குள் செலுத்த வேண்டும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க. 21.08.2025.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து - தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (12.08.2025) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Digitally signed by THIRUGNANASAMBANDAM P
Date: 2025.08.12 17:22:01 +0530

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.

1. <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை .

2. <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை.

Digitally signed by THIRUGNANASAMBANDAM P
Date: 2025.08.12 17:22:12 +0530

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.